For Private circulation only

DHAYA MINISTRIES

# ரேமா
## செய்திமடல்

மலர் 12 ஏப்ரல் - ஜூன் 2020 இதழ் 4 - 6




T8/510, Sagar Lake View Homes, Ayodhya Bye Pass Road, Piplani Post, Bhopal (M.P.) - 462022
Contact Nos: 09893141410, 09840517559,Website www.dhayaministries.org

## ஆசிரியர் கடிதம்...............



பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும், இரக்கமும், சமாதானமும் உங்கள் அனைவருக்கும் உண்டாவதாக!

பிரியமான, தேவனுடைய பிள்ளைகளே! தேவனுடைய பெரிதான கிருபையினால் ‘ரேமா செய்தி’ மடல் மூலமாக உங்களை சந்திப்பதில் மிகவும் சந்தோஷமடைகிறேன். உலகம் முழுவதும் கொள்ளை நோய்கள் பரவி வரும் இந்த நாட்களில் தேவன் ஜனங்களை பாதுகாக்கவும், அனைவரும் தேவனிடத்தில் திரும்ப நாம் ஜெபிக்க வேண்டும்.

மோசே இஸ்ரவேல் ஜனங்களை அழைத்துக் கொண்டு எகிப்தை விட்டு பிரயாணப்பட்டு வரும் போது வழியில் தேவன் மோசேயோடு முகமுகமாய் பேசினார், மோசே கர்த்தரை நோக்கி: தேவரீர் எனக்கும் உமது ஜனங்களுக்கும் உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்தென்பது எதினால் அறியப்படும்; நீர் எங்களோடே வருவதினால் இப்படியே பூமியின் மேலுள்ள ஜனங்கள் எல்லாரிலும், நானும் உம்முடைய ஜனங்களும் விசேஷித்தவர்கள் என்று எப்படி விளங்கும் என்றார்.

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி நீ சொன்ன இந்த வார்த்தையின்படியே செய்வேன்; என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது, உன்னை பேர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறேன் என்றார்.

“என் கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது” ஆம், நம் அனைவருக்கும் தேவனுடைய கண்களில் கிருபை கிடைக்க வேண்டும். தேவனுடைய கிருபை இல்லாவிட்டால் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது.

சங்கீதக்காரன் எழுதியிருக்கிறார்: “தேவரீர் எழுந்தருளி சீயோனுக்கு இரங்குவீர்; அதற்குத் தயை செய்யுங்காலமும், அதற்காகக் குறித்த நேரமும் வந்தது” என்று சங்கீதம் 102:13 - ல் வாசிக்கிறோம்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே! இந்த கடைசி காலங்களில்.... தேவனுடைய கிருபையை நாம் விருதாவாக்க வேண்டாம். மோசேக்கு தேவனுடைய கண்களில் கிருபை கிடைக்க காரணம்: மோசே “தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன்” என்று தேவனே மோசேயைக் குறித்து சாட்சிக் கூறுகிறார். இன்று இயேசு கிறிஸ்து வருவார் என்றால் இயேசு கிறிஸ்துவை சந்திக்க உங்களால் முடியுமா? நம் தேவனை சந்திக்க ஆயத்தமாவோம்.

பரவி வருகிற கொள்ளை நோய்யிலிருந்து நமது தேசமும், உலக மக்களும் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்றால் தேவனுக்கு பிரியமானவர்களாக வாழும் போது..... தண்டைக்கு தப்பித்துக் கொள்ளுவோம். இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போனால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வோம்?.... தேவனிடத்திற்கு திரும்பும் போது நமது தேசத்திற்கு ஷேமத்தை தேவன் கட்டளையிடுவார்.

பேதுரு எழுதின வண்ணமாக எழுதுகிறேன்: நீங்கள் நிலைகொண்டு நிற்கிற கிருபை தேவனுடைய மெய்யான கிருபைதானென்று சாட்சியிடும்படிக்கும் தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாக்கபடிக்கும், கர்த்தருக்குள் நீங்கள்படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களுமாய் இருப்பீர்களாக!ஆமென்

**கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி**
**ஜோஸ்பின் டேனியல்**



# நுகத்தை முறிப்பேன்...



சகோ. ஆல்ஃப்ரட் டேனியல்

உலகம் முழுவதும் பார்ப்போம் என்றால் நுகத்தை சுமப்பதை யாரும் விரும்புவதில்லை. எல்லாரும் நுகத்திலிருந்து விடுதலைப் பெறவே தான் விரும்புகிறார்கள். நுகங்களில் அநேக விதங்கள் உண்டு. கடன், வியாதி, பெலவீனங்கள், சாபங்கள், குறைவுகள், அடிமைதனம் இவைகள் யாவும் நுகங்களாகும். மனிதனை சிருஷ்டித்த தேவன் விரும்புகிறார்: அவர்கள் ஆசீர்வாதம், ஆரோக்கியம், விடுதலையோடும் வாழ்வதற்கே தன் சாயலில் மனிதர்களை தேவன் சிருஷ்டித்தார். அவர்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி சகல சிருஷ்டியின் மேல் ஆளுகைச் செயவே படைக்கப்பட்டார்கள். மனிதன் தேவனுக்கு கீழ்ப்படிந்த வரை தேவனோடு நடந்தார்கள். சகல சிருஷ்டியின் மேல் ஆளுகைச் செய்தார்கள். சகல சிருஷ்டிப்பும் மனிதனுடைய ஆளுகைக்குள் இருந்தது.

மனிதன் தேவனுக்குக் கீழ்படியாமல் சர்ப்பத்தின் வார்த்தையைக் கேட்டான். அன்றிலிருந்து பாவ நுகத்தின் கீழ் மனிதன் வந்தான். பாவம் மனிதனின் மேல் அதிகாரம் செலுத்த ஆரம்பித்தது. அதினால் மனிதன் பாவத்திற்கு அடிமையாகிவிட்டான். மனிதன் விரும்புவதைச் செய்ய முடியாமல் அவன் விரும்பாததைச் செய்கிறான். அதைச் செயல்படுத்துகிறது மனிதன் அல்ல அவனை ஆளுகைச் செய்கிற பாவமே.

தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருப்பது பாவமாகும். ஆதாம் முதலாவது தேவனுக்கு கீழ்ப்படியாமல் சர்ப்பத்தின் வார்த்தையைக் கேட்டான் அதனால் பாவம் உண்டானது. கீழ்ப்படியாததினால் தண்டனை வெளிப்பட்டது. அவன் ஆசீர்வாதம், ஆரோக்கியம், சுதந்திரத்திற்கு பதிலாக சாபம், பெலவீனம், குறைவு, அடிமைத்தனத்திற்கு பலியானான். ஆகையால், அவனுடைய சுதந்திரம் பரிக்கப்பட்டு பாவத்திற்கு அடிமையானான். பாவத்திற்கு அடிமையானதினால் அவனுக்கு விலைக்கிரயம் கொடுக்கப்பட்டது. எந்த கிரியைச் செயதாலும் அதற்கு நிச்சயமாக பலன் உண்டு. பாவத்தின் சம்பளம் மரணம்.

மனிதன் பாவம் செய்து தேவனுடைய மகிமையை இழந்தான். அதனால் தேவன் ஆதாமை ஏதேன் தோட்டத்தைவிட்டு துரத்திவிட்டார். முதல் மனிதன் பாவம் செய்ததினால் தான் ஆசீர்வாதத்தை இழந்து சாபத்திற்கு கீழாக்கப்பட்டான். மனிதன் பாவம், சாபம், குறைவு, பெலவீனம், வியாதி மற்றும் மரணத்திற்கு ஆளாக்கப்பட்டான். அது அவனுக்கு நுகமாக மாறினது. அவனால் சுமக்கக்கூடாத பாரமாயிற்று. தேவன் அதற்கு கிரயமாக தன் ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்க அனுப்பினார். கர்த்தராகிய இயேசு தனக்கு நேராக வருவதை கண்டு, “இதோ, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி” என்று யோவான் ஸ்நானகன் கூறினார்(யோவான் 1:29).

நாம் பாவத்திற்கு செத்து நீதிக்கு பிழைத்திருக்கும்படிக்கு இயேசு தமது சரீரத்தில் உலகத்தின் பாவங்களை சிலுவையின் மேல் சுமந்தார்(I பேதுரு 2:25). நாம் பாவத்திற்கு மரிக்காதவரையிலும் நீதிக்கு பிழைத்து வாழ முடியாது. ஆகையால் நாம் பாவி என்று ஒத்துக்கொள்வது மிகவும் அவசியம் அவைகளை அறிக்கைச் செய்து விட்டுவிடுதினால் தேவனுடைய இரக்கத்தை பெறுவோம்(நீதி 28:13). அநேகர் நான் பாவங்கள் செய்யவில்லை என்று கூறுகிறார்கள். அவைகளை ஏற்றுக்கொள்வதுமில்லை. வேதாகமம் கூறுகிறது: நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராயிருக்கிறார் (யோவான் 1: 8,9).

நம்மிடத்தில் பாவமில்லை என்று சொன்னால் பொய்யராவோம், அவருடைய வார்த்தை நம்மில் இராது. ஒரு மனிதன் பாவம் செய்ததினால் உலகம் முழுவதிலும் பாவம் வந்தது. இந்த உலகத்தில் பிறக்கிறவர்கள், பாவத்தில் பிறக்கிறார்கள். பக்தன் தாவீது கூறினார்: ‘இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்’ (சங்கீதம் 51:5). பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் பாவத்தினால் பிறக்கிறது என்றால் என்னிடத்தில் பாவம் இல்லையென்று எப்படிச் சொல்ல முடியும்? பாவம் இல்லையென்று

கூறினால் அவர்கள் தங்களுடைய சுபாவத்தில் பாவம் மறைந்துள்ளது என்று அறியவில்லை மற்றும் அறிந்துக் கொள்ளவேண்டுமென்று விரும்பவுமில்லை. அவர்கள் அறிந்துக் கொள்ளாவிட்டால் எப்படி அறிக்கைச் செய்வார்கள்? அவர்களுக்குள் பாவம் இருக்கிறது என்று அறிவது அவசியம். பாவத்தினுடைய நுகங்கள் அவர்கள் மீது இருக்கிறது. அதினாலே அவர்கள் செய்ய நினைப்பது செய்ய முடிவதில்லை. அவர்களுக்குள் இருக்கிற பாவம் அவர்களை செயல்படுத்துகிறது. அதனுடைய நுகங்கள் முறிக்கப்படுவது அவசியம். அவை முறிக்கப்படாத வரையிலும் பாவம் அவர்களில் கிரியைச் செய்துக்கொண்டே இருக்கும். பாவத்தின் நுகத்தை இயேசு கல்வாரி மரத்தினால் முறித்தார். அவரை விசுவாசியாத வரையிலும் பாவத்தின் நுகத்தின் கீழ் இருப்பார்கள்.

தேவன் உலகத்தை இரட்சிப்பதற்காகவே; தன்னுடைய ஒரே பேறான குமாரனை தந்து அவரை விசுவாசிக்கிறவர்கள் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவன் பெற தேவன் தன் குமாரனை உலகத்திற்கு அனுப்பினார். உலகம் நியாயத்தீர்க்கப்பட அல்ல ஆனால் உலகம் இரட்சிக்கப்படவே.. (யோவான் 3:13&17). மக்கள் பாவத்தின் நுகத்திலிருந்து விடுதலைப் பெற தேவன் விதிகளை வைத்துள்ளார். தேவ குமாரனாகிய இயேசு என் பாவத்திற்காக மரித்தார் என்று விசுவாசித்தால் போதும். ரோமர் 10 - ம் அதிகாரம் வசனம் 13 - ல் வாசிக்கிறோம்.... “கர்த்தரின் நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்”. அவரை விசுவாசியாதவர்கள் கர்த்தரின் நாமத்தை எப்படி சொல்லுவார்கள். தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் நிச்சயமாய் இரட்சிக்கப்படுவார்கள். இருதயம் விசுவாசிக்கும் வாய் அறிக்கைச் செய்யும். இருதயமே விசுவாசிக்காவிட்டால் வாய் எப்படி அறிக்கைச் செய்யும் கர்த்தரே இரட்சகர் என்று. இயேசு இரட்சகர் என்று ஏற்றுக் கொள்கிறவர்களுடைய பாவத்தின் நுகம் முறிக்கப்படும். ஏனெனில் கர்த்தராகிய இயேசு பாவத்தின் நுகத்தை முறித்து போட்டார். அவர்களுக்கு பாவத்திலிருந்து விடுதலைக் கிடைத்துவிடுகிறது. அவர்களுக்குள் கர்த்தராகிய இயேசு பிறந்துள்ளார். தேவனால் பிறந்தவன் பாவம் செய்யமாட்டான் (I யோவான் 5:18). ஏனெனில் அவர்களுக்குள் பாவத்தின் பிராணத்திற்கு முடிவு உண்டானது.

தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலி 2:9-11). இயேசுவின் நாமத்தில் வல்லமையுண்டு, அவருடைய நாமத்தினால் நுகங்கள் முறிக்கப்படுக்கிறது. அவருடைய நாமத்தினால் அசுத்தாவியும், தீய ஆவியும் நடு நடுங்கிறது. அவருடைய நாமத்தை விசுவாசத்துடன் பயன்படுத்துவோமென்றால் சாத்தானும், அசுத்தாவியும் நடு நடுங்கி ஓடம், ஜனங்களுக்குள் காணப்படுகிற அசுத்தாவியின் நுகங்கள் முறிக்கப்பட்டு விடுதலையடைகிறார்கள்.

அசுத்தாவியினாலும், சாத்தானினாலும் பாதிக்கப்பட்டவர்கள் தன்னை தான் காயப்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் யாருக்கும் கட்டுப்படுவதில்லை. அவர்களுடைய மனமும் அவர்களை கட்டுப்படுத்துவதில்லை. அவர்கள் சுயநிலையில் இருப்பது இல்லை. இப்படிப்பட்டவர்களை இயேசுவின் நாமம் மாத்திரமே விடுதலை தருகிறது. இவர்களை ஒருவரும் சுகப்படுத்த முடியாது. ஆனால் இயேசுவின் நாமம் மாத்திரமே சுகம் தருகிறது. நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும், இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து; துறைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (கொலோ 2:14&15).

இயேசு சகல துறைத்தனங்களின் மேலும், அதிகாரங்களின் மேலும் ஜெயம் எடுத்தார். சாத்தானின் சகல அதிகாரத்தையும் இயேசு தன் சிலுவையின் மரணத்தினால் ஜெயித்தார். அதினால் சகல துரைத்தனங்களும், சாத்தானின் அதிகாரமும் இயேசுவின் நாமத்தினால் நடுநடுங்கிறது. சாத்தானின் மூலமாக வருகிற நுகங்கள் இயேசுவின் நாமத்தினால் முறிந்து போகிறது. இயேசுவின் நாமத்திற்கு தேவன் அந்த வல்லமையை அருளியிருக்கிறார். அவருடைய நாமத்தினால் வியாதியஸ்தர்கள் சுகமாகிறார்கள், பெலவீனர்கள் பெலனைப் பெற்றுக்கொள்கிறார்கள். குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், குருடர்கள் பார்வையடைகிறார்கள், சப்பானிகள் நடக்கிறார்கள், மரித்தவர்கள் உயிருடன் எழும்புகிறார்கள், தரித்திரர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது

இவைகள் எல்லாம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நடக்கிறது. இயேசுவின் நாமத்தினால் ஜனங்கள் விடுதலையாகி எல்லா நுகங்கள் முறிக்கப்பட்டு, விடுதலையாக்கப்படுகிறார்கள். இயேசுவின் நாமத்தின் மேல் விசுவாசம் வைத்து செயல்படும் போது கிரியைகள் நடக்கிறது.

இயேசுவின் இரத்தத்தின் வல்லமையினால் நுகங்கள் முறிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறித்து அறிவதற்கு முன்பாக அவருடைய பிறப்பை அறிவது அவசியமாகும். ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத்தென்னும் ஊரில், தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையினிடத்திற்கு தேவனாலே அனுப்பப்பட்டான்; அந்தக் கன்னிகையின் பேர் மரியாள், அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார். ஸ்தீரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றாள். அவளோ அவனைக் கண்டு, அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த வார்த்தை எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள். தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய். இதோ, நீ கர்ப்பவதியாகி, ஒரு குமரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவருடைய குமாரன் எனப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்திற்கு முடிவிராது என்றான். அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி, இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது. தேவனுடைய குமாரன் எனப்படும் (லூக் 1: 26 - 35)

இயேசு பிறக்கும் பொழுதே பரிசுத்தராய் இருந்தார் என்று மேலே படித்தோம். பரிசுத்தாவியின் உதவியுடன் உன்னதமானவருடைய வல்லமையுடன் இயேசு பிறந்தார். அவர் பிறக்கும் பொழுதே அவரில் ஒரு பாவமும் இல்லை. பாவத்தை சுமக்கிற ஆட்டுக்குட்டியாக இயேசு வந்தார். அவர் தன்னுடைய இரத்தத்தை சிலுவையில் சிந்தினதினால் நம் யாவருக்கும் இரட்சிப்பு, விடுதலை, ஆசீர்வாதம் கிடைத்தது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் மன்னிக்கிறது, வியாதிகள், பெலவீனங்களிலிருந்து சுகம் அளித்தது. சாபத்திலிருந்து விடுதலையும், ஆசீர்வாதமும் அளித்தது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மிகவும் வல்லமை நிறைந்தது மந்திரங்களும், தந்திரங்களும் அதற்கு முன்பு பலிப்பதில்லை. இயேசுவின் இரத்தம் சகல விதமான கொள்ளை நோய், சகல விதமான பயங்கரத்திற்கும், திகில், பயத்திலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது. இயேசுவின் இரத்தம் சாத்தானுடைய செயல்பாடுகளை தடுத்து நிறுத்துகிறது. இயேசுவின் இரத்தம் சத்துருவின் வஞ்சகமான எண்ணத்திற்கும், அவனுடைய தந்திர கிரியைகளின் மேலும் ஜெயத்தை தருகிறது.

இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது (Iயோவான் 1:7). நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!

கிறிஸ்து நமக்காக சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் (கலா3:13). நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (Iகொரி 15:57). அதினால் உங்கள் சரீரத்தினாலும், உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் (I கொரி 6:20).

பரிசுத்தாவியின் அபிஷேகம் நுகங்களை முறிக்கும். அதனால் பரிசுத்தாவியின் அபிஷேகத்தின் நிறைவு பெறுவது மிக அவசியம். பரிசுத்தாவியே தேவனுடைய ஆவி, அவரால் புதிய பிறப்பின் அனுப்பவத்தைப் பெற முடியும். அந்த அனுபவம் இல்லாமல் தேவனுடைய ராஜ்யத்தை பார்க்க முடியாது. அவருடைய ஆவியினால் பிறக்காவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது.

இயேசு மாம்சத்தில் ஊழியம் செய்தப்போது யூதர்களின் அதிகாரியான நிக்கொதேமு இராக்காலத்தில் இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில்

ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்றும் ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும் (யோவான் 3: 2-6)

தாயின் வயிற்றில் பிறந்தவர்கள் சரீரத்தினால் பிறந்தவர்கள் சரீரத்தினால் பிறந்திருக்கிறார்கள். சரீரத்தினால் பிறந்தவர்கள் சரீரத்தை குறித்தே சிந்திக்கிறார்கள். ஆவினால் பிறந்தவர்கள் ஆவியைக் குறித்தே சிந்திக்கிறார்கள். இன்னமும் நீங்கள் சரீரத்தைக் குறித்தே சிந்திக்கிறீர்கள் என்றால் நீங்கள் ஆவியினால் பிறக்கவில்லை என்று தான் அர்த்தம். ஏனெனில், சரீரம் ஆவிக்கு விரோதமாக இச்சிக்கிறது, சரீரமும், ஆவியும் ஒன்றுக்கொன்று விரோதமாக இருக்கிறது. நீங்கள் செய்ய வேண்டுமென்று நினைக்கிறவைகளை செய்யாதபடிக்கு தடைச்செய்கிறது.

ஆவியிலே பிறப்பதற்கு தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டும், ஆவியைப் பெறுவதற்கு வாஞ்சிக்க வேண்டும். விரும்பினால் மட்டும் போதாது ஆவியிலே பிறப்பதற்கு தேவனிடத்தில் கேட்க வேண்டும். கேளுங்கள், அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்” - மத் 7:7. சரீரத்தைக் குறித்து சிந்திக்கிறவன், சரீர தேவைக்களுக்காகவே ஜெபிக்கிறான். அதற்கு மேலான காரியங்களைக் குறித்து அவன் ஜெபிப்பது இல்லை. சரீர சிந்தை மரணம், ஆவியின் சிந்தையோ நித்திய ஜீவன். தேவனுடைய ராஜ்யத்தை தேடுகிறவர்களுக்கு இவைகளெல்லாம் அதாவது பூமியின் சகல ஆசீர்வாதமும் கொடுக்கப்படும். பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும் போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு பரிசுத்த ஆவியை கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா (லூக் 11:13).

“ஒருவன் தாகமாய் இருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்கிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்று தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியை குறித்து இப்படி சொன்னார் (யோவான் 7:37-39). பரிசுத்தாவியின் நிறைவுப் பெற தாகத்தோடு கேட்டால் மாத்திரம் போதாது விசுவாசத்துடன் பரம தகப்பனிடத்தில் கேட்கவேண்டும். அப்பொழுது பரம தகப்பன் இயேசுவின் மூலமாக பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் தருவார். யோவான் ஸ்நானகன் சாட்சியாக சொன்னது: ஆவியானவர் புறாவைப் போல வானத்திலிருந்து இறங்கி, இவர்மேல் தங்கினதைக் கண்டேன். நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனால் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார் மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரோ பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார் (யோவான் 1: 32,33).

பரிசுத்தாவியின் அபிஷேகம் இயேசு கிறிஸ்துவின் மூலமாக கிடைக்கிறது. அதினால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பது மிக அவசியம், அவர் மூலமாக பாவத்ததிலிருந்து மன்னிப்பு, வியாதி பெலவீனம் சாபத்திலிருந்து விடுதலைக் கிடைக்கிறது. தேவன் இயேசுவின் நாமத்திற்கு, இயேசுவின் இரத்தத்திற்கு பரிசுத்தாவியின் அபிஷேகத்திற்கு, நுகங்களை முறிக்க வல்லமை அளித்துள்ளார். அவர்கள் மூலமாக நீங்கள் நுகத்திலிருந்து விடுதலைப்பெற முடியும். நீங்கள் விசுவாசித்து அவருடைய நாமத்தை உபயோகப்படுத்த வேண்டும். அப்பொழுது வியாதி, பெலவீனம், அசுத்தாவி, சாத்தானுடைய தந்திரச் செயல்களிலிருந்து விடுதலைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இயேசுவின் இரத்தத்தை உபயோகிக்கும் போது மந்திரம், செய்வினை, எரிச்சல், சாபத்திலிருந்து மீட்புப்

பெற முடியும். கலா 3:13 - ன் படி மரத்தில் தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்படுவான் என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காக சாபமானார். சிலுவையிலிருந்து கடந்து வருகிற இயேசுவின் இரத்தத்தை விசுவாசத்துடன் உபயோகித்தால் சாபம் முறிக்கப்படும். இயேசுவின் இரத்தம் சகலவித பயங்கரம், கொள்ளை நோய், மந்திரம், செய்வினை, எரிச்சல், சாபம் போன்றவைகளிலிருந்து பாதுகாக்கிறது.

நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தாவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடன் இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்கிறவராய் சுற்றித்திரிந்தார் (அப்போஸ்தலர் 10:38). பரிசுத்தாவியின் அபிஷேகத்தை நீங்கள் பெறும் போது உங்கள் நுகம் முறியும், பிறருக்கு நீங்கள் நன்மைச் செய்கிறவராகவும், பிசாசினால் அகப்பட்டவர்களைக் குணமாக்குவீர்கள். பரிசுத்தாவின் அபிஷேகத்தின் நிறைவை நீங்கள் பெற்றுக்கொள்ளும் வரையிலும் வாஞ்சை மற்றும் விசுவாசத்துடன் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். தேவன் நிச்சயமாக உங்களுக்கு பரிசுத்தாவியின் நிச்சயத்தை உங்களுக்கு அருளுவாராக!

எசேக்கியல் தீர்க்கதரிசியின் புத்தகத்தில் வாசிக்கிறோம்: தண்ணீர் கணுக்கால் அளவு இருந்தது, பின்பு முழுங்கால் அளவு இருந்தது, பின்பு தண்ணீர் இடுப்பளவு இருந்தது, பின்பு தண்ணீர் பெருகி நீச்சளவாய் மாறினது. அந்த நதியின் இரண்டு ஓரத்தில் கனித் தருகிற வித விதமான மரங்கள் இருந்தது, இதன் இலை உதிர்வதில்லை, அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை, அவைகளுக்கு பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியினால் மாதந்தோறும் புதுக்கனிகளைக் கொடுத்துக் கொண்டேயிருக்கும். அவைகளின் கனிகள் புசிப்புக்கும், அதன் இலைகள் ஆரோக்கியமடைவதற்கு ஏதுவானவைகள் (எசே 47:1-12). பரிசுத்தாவியின் அபிஷேகத்தின் நிறைவைப் பெறுகிறவர்கள் பரிசுத்தாவியின் கனியை வெளிப்படுத்துவார்கள் (கலா 5:22.23). இவர்கள் மூலமாக அற்புதம், அடையாளங்கள் வெளிப்படும், விருட்சத்தின் இலைகள் மூலமாக ஆரோக்கியம் கிடைக்கின்றதோ அப்படியே அதனால் ஜனங்களுக்கு ஆரோக்கியம் கிடைக்கும். எசேக்கியலுக்கு கிடைத்த அதே தரிசனமும், வெளிப்பாடும் இயேசுவின் அன்பின் சீஷனாகிய யோவானுக்கு வெளிப்பாடு கிடைத்தது: இதனை நாம் வெளிப்படுதலின் சுவிஷேமாகிய 22 - ம் அதிகாரம் 2 - ம் வசனத்தில் வாசிக்கிறோம். அந்த ஜலம் பரிசுத்தாவியின் அபிஷேகத்தைக் குறிக்கிறது. இயேசு கிறிஸ்து வாக்களித்தார்: “அந்த தண்ணீர் நித்திய ஜீவ காலமாய் ஊறகிற நீரூற்றாய் இருக்கும். அந்த தண்ணீரைக் குடிப்பவர்களுக்கு தாகம் உண்டாகாது”. பரிசுத்தாவியின் அபிஷேகம் ஜலத்தைப் போல தாகம் தீர்க்கும் நித்திய காலமாய் நமக்குள் நீரூற்றாய் இருக்கும். அந்த நாளில் நான் அவன் நுகத்தை உன் கழுத்தின் மேல் இராதபடிக்கு உடைத்து, உன் கட்டுகளை அறுப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார் (எரே 30:8). இப்பொழுதும் நான் உன் மேல் இருக்கிற அவன் நுகத்தை முறித்து, உன் கட்டுகளை அறுப்பேன் (நாகூம் 1:13). உங்கள் மேல் இருக்கிற நுகத்தை முறிப்பேன் என்று தேவன் உங்களோடு வாக்குத்தத்தம் செய்துள்ளார். அதற்கு நீங்கள் இயேசுவின் நாமம், இயேசுவின் இரத்தம், பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற வேண்டும். அப்பொழுது உங்கள் அனைத்து நுகங்களும் முறிக்கப்படும். தேவன் உங்கள் மேல் இருக்கிற அனைத்து நுகங்களையும் முறிக்க உதவிச் செய்வாராக!ஆமென்.

**தேவைகள்:**

1. ஒரு அருட்பணியாளர்களுடைய மாதாந்திர உதவித்தொகை ரூ **5000/-**
2. ஒரு அருட்பணியாளர்களின் பிள்ளைகளுடைய படிப்பிற்காக ரூ **1000/-**
3. ஒரு பணித்தளங்களில் நிகழ்ச்சி நடத்த தேவைப்படும் தொகை ரூ **2000/-**



# இப்பொழுது ஒரு மோசே தேவை......



சகோதரி. ஜோஸ்பின் டேனியல்

**அன்பான தேவனுடைய பிள்ளைகளே! என்னுடைய தின வேதாகம தியானத்தின் பகுதியில் யாத், லேவி, எண்ணாகமம் படித்துக் கொண்டிருக்கிறேன் அதில் மோசேயைக் குறித்து அதிகமாக தெரிந்துக்கொள்ள தேவன் எனக்கு உதவிச் செய்தார். அவைகளை நாம் பார்ப்போம். மோசே லேவி குடும்பத்தைச் சேர்ந்தவன். தண்ணீரிலிருந்து எடுத்தேன் என்று சொல்லி அவனுக்கு மோசே என்ற பெயர் சூட்டப்பட்டது. இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவசந்நிதியில் எட்டினது. தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபோடே செய்த உடன்படிக்கையை நினைக்கூர்ந்தார். தேவன் இஸ்ரவேல் ஜனங்களை கண்ணோக்கி, அவர்களை நினைத்தருளினார் (யாத் 2: 23-25).**

**மோசேயைக் கொண்டு அவர்களை விடுதலைச் செய்ய தேவன் மோசேயை தெரிந்து கொண்டார்.**

மேலே நாம் வாசித்தோம்: தேவன் இஸ்ரவேல் ஜனங்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவசந்நிதியில் எட்டினது. தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, தாம் ஆபிரகாம், ஈசாக், யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார். தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார். தேவன் அவர்களை நினைத்தருளினார்.

தேவன் நமது பெருமூச்சை கேட்கிற தேவன். அவர் அன்புள்ளவர், அவர் நம்முடன் செய்த உடன்படிக்கையை நினைவுகூருகிறவர். அவரை நோக்கி பார்த்தவர்களின் முகங்கள் ஒரு நாளும் வெட்கப்பட்டுப் போனதில்லை. தேவனோடு நாம் செலவிடும் நேரம் ஒரு நாளும் வீணாகாது.

தேவன் தம்முடைய ஜனத்தை நினைக்கின்றவர்:- நீ என்னால் மறக்கப்படுவதில்லை என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். "உங்கள் நடுவில் என் வாசஸ்தலத்தை ஸ்தாபிப்பேன்; என் ஆத்துமா உங்களை ஆரோசிப்பதில்லை. நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்" என்று வாக்குக் கொடுத்திருக்கிறார்.

நமக்குள் ஆண்டவர் உலாவி வருவேன் என்று வாக்குக்கொடுத்திருக்கிறார். நமது தேவன் நமக்குள் உலாவி வரும் போது நம்மில் பரிசுத்ததை எதிர்பார்க்கிறார். அவர் பரிசுத்தமுள்ளவர். தேவன் நம்மில் உலாவி வரும் போது நம்மில் அருவருப்புகளையோ தேவனுக்கு கீழ்ப்படியாத வாழ்க்கையையோ கண்டு உங்களை விட்டு விலகிப் போகாமல் இருக்க தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். உன் தேவனாகிய கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்யும்படி, அவர் சத்தத்திற்குச் செவிகொடுப்பாயானால், கர்த்தர் தமது கோபத்தின் உக்கிரத்தை உங்களை விட்டுத் திருப்பி, உனக்குத் தயை செய்து, உனக்கு இரங்கி, அவர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டதின்படி உன்னை விருத்தியடைப்பண்ணுவார்.

தேவனிடம் நாம் திரும்பும் போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். அதுமாத்திரமல்ல நடக்கப் போகின்ற காரியங்களையும் தேவன் வெளிப்படுத்துவார்.

தேவன் ஆபிரகாமுடன் நடக்கப் போகும் காரியங்களை முன்கூட்டியே பகிர்ந்துக் கொண்டார். ஏன் தேவன் நடக்க போகின்ற காரியங்களை ஆபிரகாமோடு பகிர்ந்துக் கொண்டார். கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: 'நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ' என்றவுடன் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, தான் போகின்ற இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான் (எபி 11:8). நான் உன்னை பெரிய ஜாதியாக்குவேன், பூமியிலுள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிராகமுடன் பண்ணின தன்னுடைய உடன்படிக்கையை தான் தேவன் இதுவரையிலும் நினைவுகூர்கிறார்.

தேவன் நடக்கும் காரியங்களை தீர்க்கதரிசிக்கு மறைப்பதில்லை:- தேவன் ஏன் ஆபிரகாமுடன் நடக்க போகின்ற காரியங்களை பகிர்ந்துக் கொண்டார். ஆபிரகாமிற்கு பிள்ளை இல்லை. தேவன் அழைத்த போது தேவனை நம்பி, தேவன் காண்பித்த தேசத்திற்கு உடனே கீழ்ப்படிந்துச் சென்றார். வயதும் சென்றுக் கொண்டிருக்கிறது நம்புவதற்கு எந்தவிதமான அடையாளங்களும் இல்லை. ஆனாலும் தேவன் சொன்னதை நிறைவேற்றுவார் என்ற விசுவாசம் ஆபிரகாமிற்கு இருந்தது. தேவன் ஆபிராகாமை ஒரு சிநேகிதன் என்று அழைக்கிறார். ஆம் சிநேகிதனிடம் தான் எல்லாவற்றையும் பகிர்ந்துக் கொள்வார்கள். கர்த்தர் நான் செய்யப் போகிறதை ஆபிரகாமிற்கு மறைப்பேனோ? என்று கூறுகிறார். ஆபிரகாம் தேவனை

விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று, அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான் (யாக் 2:23).

சோதோமில் பாவம் பெருகினதினால், அதனை தான் அழிக்கப் போகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டாவர், ஆபிரகாமுடன் பகிர்ந்துக் கொள்கிறார். கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப் படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார் என்று ஆமொஸ் தீர்க்கதரிசன புத்தகத்தில் 3 - ம் அதிகாரம் 7 - ம் வசனத்தில் வாசிக்கிறோம்.

தேவன் தானியேலை எனக்கு பிரியமானவன் என்று அழைக்கிறார். காரணம், பதில் தாமதித்தப் போதும் தொடர்ந்து ஜெபித்தார். ஜெபிக்கும் போது பதில் தாமதமானால் உங்கள் இருதயம் தள்ளாடப்படுகிறது அல்லவா? பதில் கொடுக்கும் தேவனை தான் ஆராதிக்கிறேனா? என்று எத்தனை முறை சந்தேகம் வந்திருக்கிறது.

தானியேலுக்கும் தேவன் நடக்கப்போகின்ற காரியங்களை முழுவதுமாக வெளிப்படுத்தினார். தேவன் தானியேலை எனக்கு பிரியமானவன் என்று அழைக்கிறார். நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கின போதே கட்டளை வெளிப்பட்டது, நான் அதை அறிவிக்க வந்தேன் என்று தூதன் சொல்னிறான். நாம் ஜெபிக்கும் போதும் தேவ தூதன் தானியலுக்குச் செய்ததைப் போல, பரலோகத்திலிருந்து நமக்குப் பதில் கொண்டு வருவார்கள். (தானி 10:12). ஆனால் தானியேலின் விஷயத்தில் உடனடியாக பதிலைக் கொண்டு வர முடியவில்லை. பதிலைக் காணும் வரையிலும் 21 நாட்கள் தானியேல் உபவாசித்து ஜெபித்தான். தானியேலின் இடைவிடாத ஊக்கமான ஜெபத்தினால், தேவதூதன் இரண்டாம் வானத்திலுள்ள துரைத் தனங்கள், அதிகாரங்கள், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள் மூலமாக வரும் தடையையும் மீறி பதிலை கொண்டுவர முடிந்தது. ஒரு வேளை தானியேலும் நான் உபவாசித்து ஜெபித்தாயிற்று என்னுடைய ஜெபத்திற்கு தேவன் பதிலே தரவில்லை என்று கூறியிருப்பார் என்றால் பதில் கிடைத்திருககுமா? உண்மை என்னவென்றால் தானியேல் பதில் கிடைக்கும் வரைக்கும் விசுவாசத்துடன் ஜெபித்தார் (தானி 9அதிகாரம்).

இந்த நாட்களில் ஜெபிக்க ஆர்வ முள்ளவர்களை தேவன் தேடிக் கொண்டிருக்கிறார். தானியேல் தன்னுடைய ஜனங்களுக்காக ஜெபித்தார். ஆபிரகாம் பட்டணம் அழிந்து போகக்கூடாது என்று வேண்டினார். தாவீது தன்னுடைய ஜனங்களின் நடுவில் உபாதிக்கிற தூதனை கண்டபோது, அவன் கர்த்தரை நோக்கி நான்தான் பாவஞ்செய்தேன்; நான்தான் அக்கிரமம்பண்ணினேன்; இந்த ஆட்கள் என்னசெய்தது? உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டுக்கும் விரோதமாயிருப்பதாக என்று விண்ணப்பம்பண்ணினான்.

மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக செயல்பட்ட போது மோசேயும், ஆரோனும் ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாக வந்தார்கள் அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த சபையாரை விட்டு விலகிப் போங்கள்; ஒரு நிமிஷத்தில் அவர்களை அதமாக்கவேன் என்றார். அவர்கள் முகங்குப்புற விழுந்தார்கள்.

மோசே ஆரோனை நோக்கி: நீ தூபக்கலசத்தை எடுத்து, பலி பீடத்திலிருக்கிற அக்கினியை அதில் போட்டு, அதின் மேல் தூபவர்க்கம் இட்டு, சீக்கிரமாய்ச் சபையினிடத்தில் போய், அவர்களுக்காகப் பாவ நிவிர்த்தி செய்; கர்த்தருடைய சந்தியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டது. வாதை தொடங்கிற்று என்றார். மோசே சொன்னபடி ஆரோன் அதை எடுத்துக் கொண்டு சபையின் நடுவில் ஓடினான் ஜனங்களுக்குள்ளே வாதை தொடங்கியிருந்தது; அவன் தூப வர்க்கம் போட்டு, ஜனங்களுக்காக பாவ நிவிர்த்தி செய்து, செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர் களுக்கும் நடுவே நின்றான். அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது. இந்த வாதை நிறுத்தப்பட மோசே சொன்ன வார்த்தையை கேட்டு ஆரோன் செத்தவர்களுக்கும், உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவாக நின்று தூபங்காட்டினார் அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது.

ஆரோன் காட்டின தூபமானது திறப்பில் நிற்கிறதற்கு அடையாளமாகும். நமக்காக கல்வாரி சிலுவையில் இரு கள்ளர்களுக்கு நடுவாக சிலுவையில் தொங்கின இயேசு கிறஸ்துவின் நிமித்தம் இன்று உலக முழுவதும் நடந்து வருகிற காரியங்களை பார்க்கும் போது நமக்காக சிலுவையில் தொங்கின இயேசுவை நோக்கி பார்த்தால் தான் விடுதலை உண்டு...... ஏனென்றால் நமக்காக அடிக்கப்பட தன்னையே ஒப்புக்கொடுத்தவர் இயேசு கிறிஸ்து ஒருவரே. அவருடைய தழும்புகளால் நாம் சுகமாகிறோம்....

ஏசாயா 53 - ல் வாசிக்கிறோம்: மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களை சுமந்தார்..... நம்முடைய மீறுதல்களிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம்...

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் மாத்திரமே.... சுகம் பெற முடியும். ஜனங்கள் ஜீவனைப் பெற வேண்டுமென்றால் மரித்தோரிலிருந்து உயிருடன் எழுந்த இயேசு கிறிஸ்துவை நோக்கிப்பார்க்க வேண்டும். ஏனென்றால் நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவரவர் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் இயேசு கிறிஸ்துவின் மேல் விழப்பண்ணினார்..... என்று ஏசாயா 53-ம் அதிகாரத்தில்

வாசிக்கிறோம்.

முதலாவது நாம் தேவனை தேட வேண்டும், மற்றவர்களும் தேவனை தேட நாம் உதவியாக இருக்க வேண்டும். ஏனென்றால் நாம் அனைவரும் உலகத்திலும், சபைக்களுக்குள்ளும் எருசலேமிலும் நடக்கின்ற காரியங்களை கொண்டு நாம் இயேசுவின் வருகை எவ்வளவு சமீபத்தில் இருக்கிறதென்பதை நிதானித்து அறிந்துக் கொள்ள முடியும்.

உலகத்தின் அனைத்துக் காரியங்களையும் நாம் பார்க்கும் போது திட்டவட்டமாக தெரிகிறது எப்பொழுது இயேசு கிறிஸ்து வருவார் என்று நம்மில் அநேகருடைய இருதயமும் இயேசு கிறிஸ்து சீக்கிரம் வந்தால் நன்றாக இருக்குமென்று சொல்கிறது.

ஏனென்றால் உலகத்தில் பாவங்களும் அக்கிரமங்களும் பெருக்கொண்டே போகிறது... பணஆசைகளும், சரீர இச்சைகளும் மனிதனின் மேல் ஆளுகைச் செய்கிறது. உண்மை கிறிஸ்துவத்தை காணவே மிகவும் அரிதாக காணப்படுகிறது. கிறிஸ்துவத்தை காணவே மிகவும் அரிதாக காணப்படுகிறது. கிறிஸ்துவை பின்பற்றுகிறேன் என்று சொல்லி தங்களையே ஏமாற்றிக் கொண்டு பக்திவேஷம் போடுகிறவர்கள் அநேகர் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான தீர்க்கதரிசன அடையாளங்கள் நிறைவேறி வருகின்றன.

"ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்" என்று மத் 24:14-ல் சொல்லப்பட்ட வசனத்தின் படியே முடிவு சமீபமாக இருக்கிறது.

பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது: "அப்படியே நீங்களும் விழித்திருங்கள்; வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள். நீங்கள் நினையாத வேளையில் அவன் வந்து உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டு பிடியாதபடிக்கு விழித்திருங்கள் (மாற்கு 13:35,36).

சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? என்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக. ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக் கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள், யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள், கலங்காதபடி எச்சரிக்கையாக இருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது.

ஜனத்துக்கு விரோதமாக ஜனமும், ராஜ்யத்திற்கு விரோதமாக ராஜ்யமும் எழும்பும் பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் பூமியதிர்ச்சிகளும் பலயிடங்களில் உண்டாகும். இவைகள் எல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம். அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக் கொடுத்து, உங்களைக் கொலைச் செய்வார்கள்; என் நாமத்தின் நிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள். அநேக கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். அக்கிரம மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம். முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.

இதனை வாசித்துக் கொண்டிருக்கிற அருமையானவர்களே! ஆமொஸ் 5 - ம் அதிகாரம், 6 - ம் வசனம் சொல்கிறது: கர்த்தரைத் தேடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள். இந்த கொள்ளை நோய்கள் பரவி வரும் இந்நாட்களில் நாம் பிழைக்க வேண்டுமென்றால் தேவனிடத்தில் திரும்பும்படி தேவன் எதிர்பார்க்கிறார்.

"மனந்திருங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள், சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" - எசேக் 18:27.

"ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்" - ரோமர் 8:13.

பாவ வழிகளையும், தேவனுக்கு பிரியமற்ற காரியங்களையும், விட்டு தேவனிடத்தில் திரும்ப தேவன் விரும்புகிறார். ஒருவரும் கெட்டு போகாமல் நித்திய ஜீவனை பெறவே தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை நமக்காக சிலுவையில் பலியாக தந்தார். இன்று யார் ஒருவர் சிலுவையை நோக்கி பார்க்கிறார்களோ, அவர்கள் நிச்சயமாகவே பிழைப்பார்கள். தேவன் அழிக்க அல்ல நமக்கு ஜீவன் தரவே காத்திருக்கிறார். இன்றே இரட்சணிய நாள்!

ஒருவேளை இன்று மரணம் நேரிடும் என்றால் அல்லது இன்று, இப்பொழுது தேவனுடைய வருகை இருக்கும் என்றால் தேவனை சந்திக்க முடியுமா?

நாம் அனைவரும் தேவனுடைய வருகைக்கு ஆயத்தமாவோம், மற்றவர்களையும் ஆயத்தப் படுத்துவோம். எசேககியல் 9:4 -ல் வாசிக்கிறோம்: தேசத்தில் நடக்கிற அருவருப்புகளினிமித்தம் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றியில் அடையாளம் போடும்படி ஒரு மனிதனை தேவன் தேடுகிறார். அந்த நபர் நீங்களாக இருப்பீர்களா?.... தேவன் தாமே நீங்கள் பிழைக்கும்படிக்கும் உங்கள் நிமித்தம் மற்றவர்களும் தேவனிடத்தில் திரும்பவும் உங்களுக்கு உதவிச் செய்வாராக!.



# என்னைப் பின்பற்றி வா!



Mrs. கமலா பால்ராஜ்

பிரியமான தேவஜனமே, நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துனாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக! தேவன் அன்புடனும், தம் இரக்கமுள்ள ஐசுவரியத்தின்படியும், தம் சாயலில் படைத்து அவனோடு உறவாடி மகிழ்ந்து, வாழ்ந்த சமயம் ஆதாம், ஏவாள் பாவம் செய்ததினால் தேவ மகிமையை இழந்து, தண்டனையைப் பெற்று, கீழே தள்ளப்பட்டர்கள் மனுக்குலம் பலுகிப் பெருகிற்று பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவ பிரசன்னத்தில் வரமுடியாது.ஆனால் தேவன் தம் சிருஷ்டிப்பின் சிகரமாகிய மனிதனின் பிரிவைத் தாங்காது அவனை மறுபடியுமாகத் தன்னிடம் சேர்க்க திட்டமிட்டார். பூமியின் அஸ்திபாரம் போடுமுன்னமேநம்மைப் பெயர் குறித்து தன் பிள்ளைகளாகவும், ராஜ்யத்தின் சுதந்திரமாக்குவதற்கும் அநேகரை முன் குறித்து மீட்டு பரிசுத்த ஜாதியாக தன்னுடன் வைத்துக்கொள்ள திட்டமிட்டார். அவர்களை மறுபடி பலலோகவாசிகளாக்க ஆவலுற்ற தகப்பன் தன் ஒரேபேறான குமாரனான இயேசுவை இவ்வுலக இரட்சகராக அனுப்பினார்.

ஏற்ற காலத்தில் தேவன், தன் குமாரனாகிய இயேசுவை இவ்வுலகில் அனுப்பினார். தன் 30 வயது வரை பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடந்து தன் பொறுப்புகளை முடித்து முப்பாம் வயதில் யோவான் ஸ்நானன் (இயேசுவுக்கு முன்தூதனாக வந்தவன்) கொடுத்த ஞானஸ்நானத்தை தேவ சித்தப்படி யோர்தான் நதியில் பெற்றார். உடனே தன் பிதாவின் இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றும், பரலோக இராஜ்ஜியத்தை இவ்வுலகில் ஸ்தாபிக்கும் வேலையைத் துவங்கினார். அவ்வாறு பிரசங்கித்த காலகட்டத்தில் தனக்கென்று உண்மையாய் உத்தமமாக கூடவே இருந்தது ஊழியம் செய்ய சிலரைத் தொந்தெடுத்தார். இப்போது அவர் யாரை எவ்வாறு அழைத்தார்? தன் 31.'.2 வருட ஊழியத்தில் எவ்வாறு அவர்களை ஆயத்தப்படுத்தினார்என்று சற்று ஆராய்வோம்.
இயேசுவின் அதிகாரமான உபதேசத்தினாலும், வல்லமையான அற்புதங்களினாலும், அதிசயப்பட்ட மக்கள் ஏராளமாய் அவரைப் பின்பற்றி வந்தனர். ஆனால் அவர்களில் 12 பேரை மட்டும் தன்னோடேயே இருக்கும்படியாய் தனிப்பட்ட முறையில் தெரிந்தெடுத்தார். அழைக்கப்பட்டவர்கள்அநேகம், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்.
யாரை, எப்படி தெரிந்தெடுத்தார்? யோவான் ஸ்நானனின் 2 சீஷர்கள் அவனுடன் போய்க்கொண்டிருக்கும் போது யோவான் ஸ்நானன் இயேசு கடந்து போகிறதைப் பார்த்து இதோ, உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டி என்று கூற அந்த இரண்டு சீஷரும் அவனை விட்டுவிட்டு இயேசுவின் பின் வந்தனர். எதைத் தேடுக்கிறீர்கள் என்று இயேசு கேட்க, நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று அவரைக் கேட்டனர். இயேசு அவர்களிடம் 'வந்து பாருங்கள்' என்றார். உடனே இவர்கள் அவர் பினனே சென்றனர். அதில் ஒருவன் அந்திரேயா, இவன் தன் சகோதனாகிய சீயோன் (பேதுரு)இடம் போய் நாங்கள் மேசியாவைக் கண்டோம் என்றார்கள். யோவான் 1:33.

அடுத்த நாள் சீமோனும் அந்திரேயாவும் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தனர் இயேசு கரையில் நின்று சீமோனே உன்படகை எனக்குத்தா என்று கூறி அதில் ஏறி பிரசங்கம் செய்தார். மீன் பிடிக்கவில்லையா என்று கேட்டபோது, ஐயரே இராமுழுவதும் கஷ்டப்பட்டும் ஒன்றும் கிடைக்கவில்லை என்றான். நீ இப்போது வலையை ஆழத்திலே போடு என்று இயேசு சொல்ல, சீமோன் உம் வார்த்தையின்படி போடுகிறேன் என போட்டான். என்ன அற்புதம்! இரண்டு வலைகள் கிழியத்தக்கதாக நிறைய மீன்கள் அகப்பட்டன. சீமோன், பயந்து அவரை நோக்கி நீர் போய்விடும், நான் பாவியான மனுஷன் என்று கூற, இயேசு அவனை நோக்கி, என் பின்னே வா, உன்னை மனுஷரைப் பிடிக்கிறவனாக மாற்றுவேன் என்றார். சீமோனும் அந்திரேயாவும், வலைகளை அப்படியே விட்டுவிட்டு அவர் பின் சென்றனர். அது போல் பிலிப்பையும் மீனவர் யாக்கோபு, யோவான் என்ற இரு சகோதரையும் இயேசு என்னைப் பின்பற்றி வாருங்கள் என அழைத்தார். நாத்தானியேலையும் இன்றும் சில மீன் பிடிக்கும் மனுஷரையும் தெரிந்து கொண்டு என் பின்னே வாருங்கள்என அழைத்தார். அல்பேயுவின் மகனான லேவி என்னப்பட்ட ஆயக்காரனை அவன் வேலை ஸ்தலத்திலிருந்து என் பின்னே வா என அழைத்தார். அவன் தான் மத்தேயு என்றழைக்கப்பட்ட சீஷன், மத்தேயு சுவிசேஷம் எழுதினவன் இவ்வாறு மீன் பிடிக்கிறவர்களையும் பாவிகள் என்று கருதப்படுகிற ஆயக்காரரையும் இயேசு, தனக்கு அன்பும், விசுவாசமும், கீழ்ப்படிதலுமுள்ளவர்களான தனது ஊழியத்தின் பாதையில் உதவுகிற பாத்திரங்களாகத் தெரிந்து கொண்டார். இந்த 12 பேரும் அவரை விட்டுப்

பிரியாமல் அவருடனேயே தங்கி, அவருக்கு உறுதுணையாயிருந்தனர். ஐசுவரியவான், பட்டதாரிகள், கனத்துக்குரியவர்களையோ தெரிந்து கொள்ளாமல், படிப்பறியாதவர்கள், தாழ்மையானவர்கள், கடின உழைப்பாளிகளையுமே தனக்கு விசுவாசமாய் கீழ்ப்படிகிறவர்களையுமே அழைத்தார். அநேகர் அவர் பின் சென்றாலும், இயேசு இவர்களைப் பிரித்தெடுக்கும் போது இரவு முழுவதும் ஜெபித்தார் என வாசிக்கிறோம். இவர்களை அப்போஸ்தலர் என்று அழைத்தார் (லூக் 6:12). தனக்கு சாட்சியாய் இருக்கப் போகிறவர்கள் அவர்களே என்று அவருக்குத் தெரியும். இயேசு இந்த அப்போஸ்தலரை எவ்வாறு பயிற்றுவித்தார்?

1. தன் கூடவே மூன்றரை வருடம் வாழ வைத்து தன் சுபாவங்களையும், தான் யார் என்பதையும் அவர்களுக்கு வாழ்ந்து காட்டினார். ஜனங்கள் தன்னை யார்எனக் கூறுகிறார்கள் என்று கேட்டறிந்தார். தன் சீஷர் யார் என்று நினைக்கிறார்கள் என தெரிந்து கொண்டார். பேதுரு கிறிஸ்து அதாவது மேசியா என அறிக்கையிட்டான்.
2. பரலோக ராஜ்யத்தைக் குறித்து அநேக உவமைகளைச் சொல்லி அதன் அர்த்தத்தையும் சீஷருக்குமட்டும் விளக்கிக் கூறினார். தான் பரலோக ராஜ்யத்தை ஸ்தாபிக்கவே வந்தேன் என்பதை ஆணித்தரமாகக் கூறினார்.
3. தன் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவே வந்தேன் என்றார். பாவிகளை இரட்சிக்கவும், பிசாசின் வல்லமையை முறியடிக்கவும், மரணத்தை ஜெயித்து, விசுவாசிகளை தேவ புத்திரராக்குவதற்கு வந்தேன் என்றார்.
4. எல்லாவிதமான வியாதிகளையும் குருடர், சப்பாணி, குஷ்டரோகிகள், அசுத்த ஆவி பிடித்திருந்தவர்கள் யாவரையும் விடுதலையாக்கி வேதவாக்கியங்களையும் தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றவே வந்தேன் என்று செய்து காண்பித்தார்.
5. தான் ஏற்படுத்தும் இரட்சிப்பைப் பெறுகிறவன் நித்தியஜீவனை அடைவான் என்று வாக்களித்தார். மலைப்பிரசங்கம் மூலமாகதேவனுக்குப் பிரியமான வாழ்வை தினசரி எப்படி கடைபிடிப்பது என விளக்கினார்.
6. நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றவே வந்தேன் என்று கூறி, அதை சுருக்கமாக 2 கற்பனைகளில் அடக்கி கொடுத்தார். 1) தேவனை நேசி 2) உன்னைப் போல பிறனையும் நேசி என்றார். ஓய்வு நாளில் நன்மை செய்வது நியாயம் என்றார்.
7. பாரம்பரியங்களையும் வெளிப்பிரகாரமான சடங்காச்சாரங்களையும் விட்டொழித்து உண்மையோடும் அன்போடும் தேவனுடைய நீதியையும் அவர் ராஜ்யத்தையும் அடுத்த காரியங்களில் கருத்தாய் ஈடுபடவேண்டும் என்று போதித்தார். விசுவாசத்தைப்பற்றியும்ஜெபத்தைப் பற்றியும் போதித்தார்.
8. மரித்தோர் உயிர்த்தெழுவார்கள் என்றும் பாடுபட்டு தானும் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என்று பல முறை சொன்னார். யவீருவின் மகளையும், நாயினூர் விதவையின் மகனையும் லாசருவையும் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பிக் காண்பித்த நிருபித்தார்.
9. நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்றார்.
10. பிதாவாகிய தேவனே தன்னை அனுப்பினார் என்று அடிக்கடி கூறி மக்களுக்கும், சீஷருக்கும் பிதாவின் அன்பை வெளிப்படுத்தினார்.

இவ்வாறு உபதேசங்கள் செய்யும் போதே, அந்த சீஷரை இரண்டு இரண்டு பேராக ஊழியம் (நற்செய்தி Gospel) செய்ய அனுப்பினார். தேவனுடைய இரட்சிப்பே - சுவிசேஷம் எப்படி போக வேண்டுமோ? எங்கே போக வேண்டும்? என்ன கூறவேண்டும் எல்லாம் கற்பித்து அனுப்பினார். அவர்கள் அற்புதங்களும் அடையாளங்களும் செய்யத்தக்கதாக, நோயை சுக மாக்க அதிகாரங்களையும், பிசாசைத்துரத்த வல்லமையையும் அருளி அனுப்பினார். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி, அவரைத் தந்தருளி இவ்வளவாய் அன்புகூர்ந்தார். இந்த இயேசுவை தேவனுடைய குமாரன் என்று ஏற்றுக்கொண்டு, அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் ஏற்றக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார் யோவான் 3:16; 1:12 இதுவே சுவிசேஷம். தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்து, வளர்ந்து, ஊழியம் செய்து பாடுபட்டு, மரித்து (சிலுவையில் அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் பரலோகத்துக்கேறி, பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். நமக்கு உதவிச் செய்யும்படி பரிசுத்த ஆவியானவரை அனுப்பியிருக்கிறார். கடைசி நாட்களில் வந்து நியாயாதிபதியாக மரித்தோரையும் உயிரோடிருக்கிறவர்களையும் நியாயந்தீர்ப்பார். இதுவே சுவிசேஷம்.

அவருக்குப் பின் செல்ல நாம் என்ன செய்ய வேண்டும்? ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன் (மத் 16:24 மத் 10:38, லூக் 9:23). தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான் என்னிமித்தமாக தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான் (மத் 16:25). தகப்பனையாவது தாயையாவது என்னிலும்

அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல (மத் 10:37). சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலச்சம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மத் 10:42).

'நானே மெய்யான திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைள் கொடுப்பான். ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்டு உலர்ந்து போவான் நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் மிகுந்த கனிகளைக்கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார். எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.
நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலோருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பது என்னுடைய கற்பனையாயிருக்கிறது. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள்.

நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுக்கப்படும். என்றார் (மத் 28: 19,20). கடைசியாக சீஷருக்குக் கொடுத்த கட்டளை: மத் 28:19,20). இயேசு உயிர்த்தெழுந்த பின்னர் தம் சீஷர்களைக் கண்டு அவர்களைத் தேற்றினார். பின்னர் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனைப் பெற எருசலேமில் தரித்திருங்கள் என்று கட்டளையிட்டார். பின்னர் இயேசு, அவர்களை நோக்கி வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து சுவிசேஷத்தைப் பரப்பி உபதேம் பண்ணுங்கள் இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார் (மத் 28:18 -20).
இயேசு எதற்காக நம்மை அழைத்திருக்கிறார்?

1. தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு - I கொரி 1:9.
2. நீங்கள் நன்மை செய்து பாடுபடும் போது பொறுமையோடே சகித்தார். அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்பட்டுமிருக்கிறீர்கள் - I பேதுரு 2:20.
3. ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்நுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார் - I பேதுரு 2:21.
4. நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் - I பேதுரு 2:24.
5. உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள்… I பேதுரு 1:15.
6. உங்கள் விசுவாசத்தின் பலனாகிய கிறிஸ்துவின் ஈவாகிய ஆத்தும ரட்சிப்பை அடைகிறீர்கள் - I பேதுரு 1:9.
7. நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்கு செய்த வாக்குத்தத்தம் - I யோவான் 2:25.
8. இயேசு சீஷர்களை நோக்கி, நீங்களே எனக்குச் சாட்சியாயிருக்கிறீர்கள் என்றார்.
9. யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை, சுயாதீனன், அடிமை என்றுமல்ல, ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு கிடையாது என போதித்தார்.
10. பிதாவுக்கு முதலிடம் கொடுத்து எல்லா மகிமையையும் அவருக்கே செலுத்த கற்றுக் கொடுத்தார். மத் 6:33; 7:21. பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவே அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

எனக்குப் பிரியமானவர்களே, இப்பேர்ப்பட்ட மகா மேன்மையான அழைப்பைப் பெற்ற நாம் தேவனுக்கு பயந்து, நம்மைத் தாழ்த்தி அவருக்குக் கீழ்ப்படிந்து, இயேசு கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகி, அவருடைய அடிச்சுவட்டில் நடந்து அவரில் அன்பு பாராட்டி, இந்த பெரிய அன்புக்காக நம் தேவனை ஸ்தோத்தரிப்போமாக. நாம் ஒவ்வொருவரும் அவருக்கு விசேஷித்தவர்கள்! அவரை ஏற்றுக்கொண்டு அவரை விசுவாசிக்கிற நாம் ஒவ்வொருவரும் சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் தினம் ஒரு ஆத்துமாவுக்கு சுவிசேஷத்தை விதைப்போமாக. அவருடைய ஸ்தானதிபதிகள் நாம் ஒவ்வொருவருக்கும் அவர் வைத்திருக்கிற வாழ்வின் நோக்கத்தை அறிந்து, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்று, தேவன் நமக்கு அருளியிருக்கிற தாலந்துகளினாலும், பரத்திலிருந்து வரும் ஞானத்தைப் பெற்று, நம் வாழ்வின் வருடங்களை மிக தாழ்மையுடன்

அவருக்கென்று அர்ப்பணிப்போமாக. ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, என் பிதாவின் சந்தோஷத்தில் பிரவேசியுங்கள் என்று சொல்லி நம்மை வரவேற்று அவருடன் நித்திய வாழ்வில் பங்கு பெறுகிற தேவபுத்திரர்களாக, தேவன் தாமே தம் மிகுந்த கிருபையினால் நம் அனைவரையும் ஆசீர்வதப்பாராக!

# பணித்தளச் செய்திகள்...........




## துதியுங்கள்

1. புதியதாக ஜெபக்கூட்டங்களில் ஜனங்கள் கலந்துக் கொண்டதற்காக.
2. வேதாகமம், கைப்பிரிதிகளை - விநியோகம் செய்ய தேவன் கிருபைச் செய்ததற்காக.
3. பணித்தளங்களில் ஞானஸ்நானம் கொடுக்க தேவன் செய்ய உதவிக்காக.
4. மால்தி, குல்டா பாய் - அதிக காலமாயிருந்த வயிற்றுவலியிலிருந்து சுகம் பெற்றார்கள்.
5. சுக்வதி பாய் - அநேக வருடங்களாக இருந்த உதிர போக்கிலிருந்து சுகம் கிடைத்ததற்காக.
6. பஹா பாய் - மன நிலை பாதிப்பிலிருந்து கிடைத்த விடுதலைக்காக.
7. அமித்தா இழுப்பு வியாதியிலிருந்து சுகம் பெற்றார்.
8. சோம் நாத் - இதய வியாதிலிருந்து சுகம் பெற்றார்.
9. கரே காவ்ங் - 26 நபர்கள் ஜெப கூட்டத்தில் புதியதாக கலந்துக்கொண்டார்கள்.
10. ஜாந்ஜ்கீர் - பணித்தளத்தில் புதியதாக 14 - நபர்கள் ஜெபத்தில் கலந்துக்கொண்டார்கள்.
11. மான்கீ - வியாதியிலிருந்து சுகம் பெற்றதினால் தேவனை ஏற்றுக் கொண்டதற்காக.
12. லீலாபாய் - தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக செயல்பட்டாள், அவர்களுடைய பிள்ளைக்கு வியாதியிலிருந்து சுகம் கிடைத்ததினால் தேவனை நேசிக்க ஆரம்பித்தார்கள்.
13. பணித்தளங்களில் தடையின்றி ஆராதனை நடத்தவும் கூட்டம் நடத்தவும் தேவன் கிருபைப் பாராட்டினதற்காக.
14. தயா ஊழியங்களுடன் இணைந்துள்ள ஜெபவீரர்கள், வாசகர்கள், உதவியாளர்களுடைய குடும்பங்களில் தேவன் கொடுத்த சுகம், பாதுகாப்பிற்காக
15. ஊழியங்களின் நிமித்தம் பயணித்த பயணங்களில் தேவன் கொடுத்த பாதுகாப்பு மற்றும் சுகத்திற்காக.

## ஜெபியுங்கள்



1. கமல்சிங், மான்வத்தி - முழு குடும்ப அங்கத்தினர்களும் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர.
2. ஞானஸ்நானத்திற்காக காத்திருப்போர் தடையின்றி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள.
3. கரே காவ்ங், சென்குடா கிராமங்களில் ஜெப ஆலயம் கட்டப்பட.
4. அனு லதா - இழுப்பு வியாதியிலிருந்து விடுதலைப் பெற ஜெபியுங்கள்.
5. சிங்காரோ பாய் - அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற.
6. துளசி பாய், சாதான - இருவருக்கும் குழந்தை பாக்கியம் கிடைக்க.
7. குடிநீர் தேவைகள் சந்திக்கப்பட, கரே காவ்ங்வில் - போர் பம்பு போடப்பட.
8. அருட்பணியாளர்கள் இருவருக்கு இரு சக்கர வாகனம் கிடைக்க.
9. நீலேஷ் - மன நிலை பாதிப்பிலிருந்து சுகம் பெற.
10. சத்திய நாராயன் - இடுப்பு, முழுங்கால் வலியிலிருந்து சுகம் பெற.
11. ரானு பஞ்சாரே, ஆமெரிக்கா பாய் - இவர்களுடைய கால்களிலுள்ள வலியிலிருந்து சுகம் பெற.
12. அடிக்கடி மயக்கம் வந்து விழும் - ஜீவனுக்கு சுகம் கிடைக்க.
13. அன்சூமான் - கடனின் நிமித்தம் மனநிலை பாதிக்கப்பட்டிருக்கிறார். கடனிலிருந்து விடுதலைப்பெற.

14. பணித்தளங்களில் ஆராதனையில் பங்குப் பெறுபவர்கள் சத்தியத்தில் வளர.
15. அருட்பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தின் அங்கத்தினர்களின் சுகத்திற்காக, பாதுகாக்கப்பட மற்றும் அவர்களது தேவைகள் சந்திக்கப்பட.
16. நமது பத்திரிக்கை வாசகர்களுக்காக, ஊழியங்களை தங்கள் ஜெபத்தினாலும், பொருளாதாரத்தினால் தாங்கி வருபவர்களுக்காகவும், மற்றும் செயற்குழு அங்கத்தினர்களின் பாதுகாப்பு, சுகம் அவர்களின் தேவைகள் சந்திக்கப்பட.
17. எங்களுடைய அனைத்து பயணங்களிலும் தேவனுடைய பாதுகாப்பு மற்றும் சுகமும் எபபொழுதும் கிடைக்க. ஊழியங்களின் அனைத்து பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட, தேவைகளை சந்திக்க தேவன் தன்னுடைய பிள்ளைகளை எழுப்ப.
18. ஊழியங்களின் அனைத்து தேவைகளும் சந்திக்கப்பட.
19. அனைத்து சபைகளிலும் மீண்டும், ஆராதனை தொடங்கப்பட
20. சபைகளுக்குள் பரிசுத்தமும், உண்மையான தேவனுடைய அன்பும் காணப்பட
21. வீடுகளில், மருத்துவமனைகளில் தனிமையாக்கப்பட்டவர்களுடைய சுகம், சமாதானம், இரட்சிப்பிற்காகவும்.
22. அனைத்து சபைகளிலும் எழுப்புதல் உண்டாக.
23. சுகந்தி, அரிஷ், ராஜ், நீலாபாய், தீரா பாய் - குடும்பமாய் ஆசீர்வதிக்கப்ட.
24. அர்வின், சல்பாய், பீலேஷ், அன்சூ, பிரியா, - எதிர்காலம் ஆசீர்வாதிக்கப்பட
25. மீட்டாய் - எதிர்காலத்திற்காக.
26. நமது தேசத்திலுள்ள அனைத்து ஆளுகைச் செய்பவர்கள், தலைவர்கள் எடுக்கும் முடிவுகள் ஜனங்களுக்கு பிரயோஜனமாக காணப்பட.
27. கிராமத்தில் ஊழியம் செய்யும் தேவனுடைய ஊழியர்களின் தேவைகள் சந்திக்கப்பட.
28. தொழில்துறையிலுள்ள அனைவரும் ஆண்டவரை ஏற்றுக் கொள்ள.
29. ஆதரவற்ற குழந்தைகள், முதியவர்களின் பாதுகாப்பிறகாக.
30. பிரிந்த குடும்பங்கள் இணைந்து வாழ.
31. இன்னும் மந்திரங்கள், விக்கிரங்களுக்கு அடிமைப்பட்டிருக்கும் மக்களுடைய இருதயங்கள் தேவனிடம் திரும்ப.
32. பிரிந்த குடும்பங்கள் இணைந்து வாழ.

**Through scan the QR Code - You can scan & donate us**

online Banking

Dhaya Ministries and Charitable Trust

State Bank of India
A/c.No.30916103538
Branch - Purasawalkam, Chennai (T.N.)
IFS Code SBIN 0001515

**Or**

Union Bank of India
A/c.No.527102010312844
Branch - St. Joseph, Bhopal (M.P.)
IFS Code UBIN0558712

Do you have any prayer request? Please contact to us through Email or Phone.
Email: info@dhayaministries.org, Contact No. 9893141410, 9840517559
Visit us : www.dhayaministries.org

G Pay
accepted here
6 Brislee Nagar, Perambur
Barracks Post, Chennai
+91 98405 17559
9840517559@okbizaxis
BHIM UPI

# ஜெபக்குறிப்புகள்

1. இளவாலிபர், வாலிபர்களுடைய வாழ்க்கையில் மாற்றங்கள் வர.
2. முப்படை வீரர்களின் சுகம், பாதுகாப்பு மற்றும் இரட்சிப்பிற்காக.
3. நமது தேசத்திலுள்ள குழந்தைகள், வாலிப மற்றும் பெண்களின் பாதுகாப்பிற்காக.
4. வறுமையிலுள்ளவர்களின் தேவைகள்சந்திக்கப்பட. வேலையில்லா நிலைமை நமது தேசத்தில் மாற.
5. பத்திரிக்கை, Media - மூலமாக ஊழியம் செய்கின்றவர்களை தேவன் வல்லமையாய் பயன்படுத்த.
6. உலகம் முழுவதும் பரவி வருகின்ற கொள்ளை நோயிலிருந்து தேசங்கள் பாதுகாக்கப்பட. முழு தேசத்திலும் கொரோனா வியாதியினால் பாதிக்கப்பட்டவர்கள் சுகம் பெற.
7. மருத்துவ, காவல், துப்புறவு - துறைகளிலுள்ள அனைவரின் பாதுகாப்பிற்காக.
8. அனைத்து ஜனங்களும் தேவனுடைய சித்தத்தையும், அன்பையும் அறிந்துக்கொள்ள.

# தயா ஊழியங்கள்

- ஒரு வார சிறப்புக் கூட்டங்கள்
- சுவிசேஷ கூட்டங்கள்
- எழுப்புதல் கூட்டங்கள்
- வேத பாட ஊழியங்கள்
- சீஷத்துவ ஊழியங்கள்
- ஆசிரியர் சிறப்பு கூட்டங்கள்
- விடுதிக் கூட்டங்கள்
- ஊழியர் புத்துணர்ச்சி ஊழியம்
- உபவாச ஜெபக்கூட்டங்கள்





- சிறுவர் வாலிபர் பெரியோருக்கான சிறப்புக் கூட்டங்கள்
- குடும்ப ஆலோசனைக் கூட்டங்கள்
- விடுமுறை வேதாகமப் பள்ளி
- ஞாயிறு பள்ளி ஆசிரியர் பயிற்சி முகாம்
- ஆலய ஆராதனைகள்
- உபவாச கூட்டங்கள்
- முடிவு உங்கள் கையில் - இரண்டாம்வருகை புத்தகம்
- சத்துரு முக்காடிட்டு செல்வான் - மனதில் வரும் போராட்டத்திலிருந்து விடுதலைப்பெற வழி
- தயா ஜோதி - இந்தி பத்திரிக்கை
- இல்லற வாழ்வின் இரகசியம் - குடும்ப ஆலோசனை புத்தகம் (இந்தி, தமிழ் மொழி)
- பாடல் புத்தகம் - இந்தி, ஆங்கிலம்

## Printed Matter

**To.........................................................**

**.............................................................**

**.............................................................**

**.............................................................**

**.............................................................**

Return Requested to:
**Post Box No.01**
**Dhaya Ministries**
Address : T8/510, Sagar Lake View Homes, Ayodhya Bye Pass Road, Piplani Post, Bhopal (M.P.) - 462022